பக்கங்கள் 6 விலை சதம் 30 ★ ★

ஈழநாடு

The EELA NADU

மலர்: 18 தை 13 ஸபர் 5 இதழ்: 846

யாழ்ப்பாணம் புதன்கிழமை 26-1-77

லாலாசோப்
2-வது தயாரிப்பு
சன்சயின்சோப்
ஒரு கட்டியின் விலை
60 சதம் மட்டுமே
288 கட்டிகள் 1 கேஸ்
162 ரூபா
ஓடர் உடனுக்குடன்
வெளிக்கப்படும்
லாலாசோப் தொழிற்சாலை
அச்சுவேலி

பெற்றோரிடம்

நிர்ப்பந்தித்து பணம் அறவிட முடியாது!

பாடசாலை அதிபர்களுக்கு கட்டளை

கொழும்பு, செவ் எந்தச் சந்தர்ப்பத்திலும் பெற்றோரிடம் இருந்து நிர்ப்பந்தித்துப் பணம் வசூலிக்கக் கூடாதென கல்வியமைச்சு பாடசாலை அதிபர்களைப் பணித்துள்ளது.

நகர பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்த்துள்ள பெற்றோர்கள் பாடசாலை வளர்ச்சிக்கென பணத்தைத் தாமாக முன்வந்து தந்தாலே தவிர நிர்ப்பந்தித்தும் பெற்றோர்களி

(2ம் பக்கம் பார்க்க)

"ஒருதுளி ரத்தமும் சிந்தாமல் நிலைமையைச் சமாளித்தோம்"

எகிப்தில்நடந்தசம்பவங்களை சுட்டிக்காட்டினர் பிரதமர்

நித்தம்புவ, செவ்வாய்

"எகிப்து தேசத்தில் சமீபத்தில் ஏற்பட்ட கலவரங்களினால் பலர் உயிரிழக்க நேரிட்டது. ஆனால் எமது நாட்டில் வேலைநிறுத்த சதி அரசியல் ரீதியில் கட்டவிழ்த்து விடப்பட்டபோதிலும் ஒரு துளி இரத்தம் கூட சிந்தாது நாம் நெருக்கடி நிலையை அகற்றி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தோம் இந்நாட்டில் வாழும் ஏழை மக்களினதும், தொழிலாளர்களினதும் ஆதரவினாலேயே அரசாங்கத்துக்கு இது சாத்தியமாயிற்று" என்று பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நேற்றுக் கூறினார்.

தேசிய லொத்தர்சபையின் 600-வது சீட்டிழுப்பு வைபவம் நித்தம்புவவில் நடைபெற்றபோது பிரதமர் அதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

பிரதமர் சொன்னதாவது:

தொழிலாளர்களுக்கும் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் நியாயபூர்வமான அடிப்படையில் சுதந்திரக்கட்சி அரசாங்கம் செய்தது போன்ற நன்மைகளை வேறெந்த அரசாங்கங்களும் இலங்கையில் செய்யவில்லை. தொழிலாளர்கள் தமது கோரிக்கைகள் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தி தமது கடைசி ஆயுதமாகவே வேலைநிறுத்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

வேறு [illegible] தொழிற்சங்கங்கள் தமது அங்கத்தவர்களிடையே

(6-ம் பக்கம் பார்க்க)

தலைமறைவாய்த்திரியும் கிளர்ச்சிக்காரர்!

பொலிசார் வலைவிரிப்பு

திருக்கோணமலை, செவ்வாய் கடந்த 1971ம் ஆண்டுக் கிளர்ச்சியின்போது பொலிஸ் நிலையங்களைத் தாக்குவதில் முன்னின்றவரெனக் கூறப்படுபவரும், தற்போது அனுராதபுரம், பொலநறுவை, திருக்கோணமலைக் காடுகளில் மறைந்திருந்து வழிப்பறிக் கொள்ளைகளில் ஈடுபட்டுள்ளவரென நம்பப்படுபவருமான ஆசிரியர் ஒருவரைத் திருக்கோணமலைப் பொலிசார் தீவிரமாகத் தேடிவருகின்றனர்.

லொக்கு பண்டார எக்நெ பக்கர என்கிற இக்கிளர்ச்சிக்காரரையும், அவரது கோஷ்டியினரையும் கைதுசெய்யும் முயற்சியில் திருக்கோணமலை உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஹோரா ஈடுபட்டுள்ளார்.

இவரைக் கைதுசெய்ய உதவும் பொதுமக்களுக்கு 35,000 ரூபாயும், கைதுசெய்யும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு 15,000 ரூபாயும் வெகுமதியாக அளிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. [ஸ்ரீ]

லோக சபையுடன் தமிழ்நாடு சட்டசபை தேர்தலையும் நடத்துக

அ. அ. தி. மு. க. வலியுறுத்து

சென்னை, ஜன 25

இந்திய லோகசபைத் தேர்தலுடன் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலையும் நடத்துமாறு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை வற்புறுத்தியுள்ளது.

இன்று சென்னையில் நடைபெற்ற அ. அ. தி. மு. க. செயற்குழுக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு ஆந்திரா, கர்நாடகம், கேரளா ஆகிய தொகுதிகளில் தமது வேட்பாளர்களை நிறுத்துவதென்றும் அ.அ.தி மு.க. செயற்குழு தீர்மானித்தது.

மக்கள் தீர்ப்பை நாடும்நோக்குடன் தேர்தலை நடத்துவதென்று தீர்மானித்ததன்மூலம் தாம் ஜனநாயகத்தில் அசைக்க

(6ம் பக்கம் பார்க்க)

தமிழ் நாட்டில் 201 கைதிகள் விடுதலை

சென்னை, ஜன. 25 தமிழ்நாடு அரசு இன்று 29 அரசியல் கைதிகளை விடுதலை செய்தது.

கடந்த ஞாயிறு முதல் இதுவரை 201 அரசியல் கைதிகளை தமிழ்நாடு அரசு விடுதலை செய்துள்ளதாக அறிவித்துள்ளது. (உ)

மூதூரில் நடவடிக்கைக்குழுக்கூட்டம்

தேர்தல் விஞ்ஞாபனம் பற்றி ஆலோசிப்பர்

யாழ்ப்பாணம், புதன் செல்வநாயகம் தலைமையில் மூதூரில் பெப்ரவரி மாதம் 4ம், 5ந் திகதிகளில் நடைபெறவிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தல் குறித்தும் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்தும் ஆராயப்படவிருக்கிறது.

தலைவர் திரு. எஸ். ஜே. வி. மூதூர் நவரத்தினம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் அபேட்சகர் நியமனங்கள் குறித்து ஆராய குழுவொன்று நியமிக்கப்படுமென்றும் நடவடிக்கைக் குழுவுக்கு மேலும் ஐவரைச் சேர்த்துக்கொள்வது பற்றித் தீர்மானிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது. [ஸ்ரீ]

சீரான ரயில் சேவை

யாழ்ப்பாணம், புதன் யாழ்-கொழும்பு ரயில் சேவைகள் வழமைபோல் சீராக நடைபெறுகின்றன என்று ரயில்வேப்பகுதி தெரிவித்தது.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்புநோக்கிச் சென்றுகொண்டிருந்த சரக்கு ரயில்வண்டியொன்று ஆனையிறவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தடம்புரண்டதை அடுத்து ரயில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (ஸ்ரீ-உ)

மெற்றலிக்ஸ்'

கணித உபகரணங்கள் ('METALIX' Mathematical Instruments) எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

சிடில்ஸ் (யாழ்ப்பாணம்) லிமிட்டெட்

151, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 507
5319

உ

ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர
பெருமான் துணை

விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமான் திருவருளை முன்னிட்டு நிகழும் நள வருஷம் தைத்திங்கள் 18-ந்நாள் (31-1-77) திங்கட்கிழமை காலை 7-00மணிக்கும் 8-00 மணிக்கும் உள்ள சுபமுகூர்த்த வேளையில் திருவண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோவில் அம்பாள் சந்நிதி முன்பாக உள்ள மண்டபத்தில்

எனது புதல்வன்
திருநிறைச் செல்வன்
குலராஜ தேவா
அவர்களுக்கும்

எமது புதல்வி
திருநிறைச் செல்வி
மல்லிகாதேவி
அவர்களுக்கும்

நடைபெற இருக்கும் திருமண வைபவத்திலும் அன்று பி.ப. 5-00 மணி தொடக்கம் மணமகன் இல்லத்தில் நடைபெற இருக்கும் விருந்து உபசாரத்திலும் கலந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

தி. கா. குமாரசாமி
இல. 7, பிரவுண் வீதி,
வண்ணார்பண்ணை.

செ. இரத்தினசபாபதியும்
பாரியாரும்
73, மானிப்பாய் வீதி,
வண்ணார்பண்ணை.

5318

இந்திய ஜனநாயகத்தின் —

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அல்ல என்பதையும் அவ்வாறு வற்புறுத்தினர். நம்முடைய ஜனநாயகமே நானிலத்தோர் அனைவருக்கும் உகந்தது என்று சில நாடுகள் நினைக்கின்றன. காலப்போக்கில் அது உருப்பெற்றது என்பதையும் அந்நாடுகளுக்கு நல்லதாயிருந்த ஒன்று இவர்களுக்குச் சிறந்ததாய் இலாமற்போகலாம் என்பதையும் இவர்கள் மறுக்கிறார்கள். புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப அந்த முறைகளை அனுகூலச் சந்ததியினர் மறுபரிசீலனை செய்வது சாத்தியமே.

ராணுவச் சவால்கள்

கடந்த இருபத்தைந்தாண்டுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட ராணுவச் சவால்களை நாங்கள் சமாளித்திருக்கிறோம். பொருளாதார நெருக்கடிகளையும் பிரிவினைப் பிரச்னைகளையும் சமாளித்துள்ளோம். எங்கள் ஐந்து பொதுத் தேர்தல்கள் ஒவ்வொரு வோட்டின் மதிப்பையும் எங்கள் வாக்காளப் பெருமக்களின் மன முதிர்ச்சியையும் காட்டுகின்றன. 1971ம் வோட்டர் தொகை 27.4 கோடி. மதம் பிரிவுகளும் உணர்ச்சிகளும்தான் இந்திய அரசியலில் ஒலிப்பவை என்று பிரசாரம் செய்யப்பட்ட போதிலும், மதச்சார்பின்மைக்கு மக்கள் வோட்டுப்போட்டுள்ளார்கள். தீவிர வலதுசாரி, தீவிர இடதுசாரி, பிற்போக்கு வாதிகள் அதிதீவிரப் புரட்சிக்காரர்கள் ஆகியோரின் விண்ணப்பங்களையெல்லாம் அவர்கள் புறக்கணித்து விட்டு, சோஷலிஸ்டு முன்னேற்றத்துக்கான ஜனநாயக நடுவழிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் தொழிற் புரட்சி நடந்த காலத்தில் வயது வந்தோர் வாக்குரிமை கிடையாது. தொழிலாளர் உரிமை என்ற பேச்சும் கிடையாது. தம் நாடுகளிலும் கடல் கடந்த பிற நாடுகளிலும் ஆண், பெண் குழந்தைகளை அப்பட்டமாக வாட்டி வருத்தித் தொழிலை வளர்த்தனர்கள். தனத்தைக் குவித்தார்கள். தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களுக்குத் தேவை ஏற்பட்டவுடன் கல்வியைக் கொண்டு வரும்படியாயிற்று. கல்வியுடன் நிலைமை மேம்பாட்டுக்கான கோரிக்கைகள் வந்தன. எனினும் அதற்குள் அந்த நாடுகளில் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கேற்ற வகையில் பொருளாதார அடித்தளம் வலுவடைந்து விட்டது. ஆனால் பாரதத்திலும் புதிதாய் விடுதலையடைந்த வேறு நாடுகளிலும் இந்த நிகழ்ச்சி முறை நேர்மாறாகி விட்டது. அரசியல் விடுதலையுடன், நெடுநாளாய் அடக்கி வைத்திருந்த ஆசைகளும் மேலெழுந்து வந்தன. பொருளாதாரத்தை மேம்பாட்டாக வேண்டுமென்ற கூட்டுக் கூச்சலாய் அது வெளிப்பட்டது. மக்களைத் திருப்தி செய்யும் ஆற்றல் ஏற்படுவது இன்னும் நெடுந்தொலைவில் இருந்தாலும் மக்கள் பொறுமை இழந்தவர்களாகவே இருந்தார்கள்.

சிரமமான பாதை

படை அணிவகுப்பு வழி மூலம் வேகப் பொருளாதார வளர்ச்சியடைவதில் வெற்றி கண்ட முறைகள் பற்றி எங்களுக்குத் தெரிந்தேயிருந்தது. எனினும், மக்களின் உரிமைகள் வழியே மாறுதல் காணுவதென்ற மேலும் சிரமமான பாதையையே நாங்கள் தேர்ந்தெடுத்தோம். இருபத்தைந்தாண்டுக் கால எங்கள் அனுபவம் எங்கள் நம்பிக்கையைப் பொய்ப்பிக்கவில்லை. நாட்டைத் தொழில் மயப்படுத்துவதும், நவீனப்படுத்துவதும் ஜனநாயகத்தால் வேகம் குன்றவில்லை. வறுமையை ஒருசில ஆண்டுகளில் ஒழிப்பது முடியாது. அது இருப்பதற்கான வெளிப்புற அறிகுறிகள் உள்ளன. எங்கள் விநியோக ஏற்பாட்டில் குறை நிறைய உள்ளது. எங்கள் குறைபாடுகளை நன்கு உணர்கிறோம். எனினும் விவசாய உற்பத்தியிலும், தொழில் அடித்தளத்தை உறுதிப்படுத்துவதிலும், பலவகைப்படுத்துவதிலும் பிரமாத முன்னேற்றம் கண்டுள்ளோம். யதேச்சாதிகார ஆட்சிகளுடன் ஒப்பிட்டால், அவற்றுக்கும் பாரதத்திற்குமிடையே பொருளாதார வளர்ச்சியில் குறிப்பான வித்தியாசம் கிடையாதென நாங்கள் கூறமுடியும்.

ஜனநாயக முறையைக் கொணருவது, சுதந்திர அரசியல் சாசனமொன்றை வரைவது, பார்லிமெண்ட் முறை ஆட்சியை நிறுவுவது ஆகியவற்றைச் செய்தவுடன் [illegible] கருத்துக் ஒழுங்கு கட்டமைப்பாக ஏற்பட்டுவிடும் என்பதில்லை. கண்காணிப்புத் தேவை நிரந்தரமானது. ஒவ்வொருவரும் ஜனநாயகத்தை ஏற்பரென்பதில்லை. ஒவ்வொருவரும் அதன் பணிகளைப் புரிந்து கொள்வரென்பதில்லை. அதன் வெற்றியை ஒவ்வொருவரும் விரும்புவரென்பதுமில்லை. வலுவான மக்கள் கட்சியொன்று விடுதலைப் போராட்டத்தை வெற்றியடைந்ததுடன் அதன் பிறகும் தொடர்ந்து தனது நோக்காலும் ஆற்றலாலும் மிகப் பெரும்பாலான மக்களை ஊக்குவிக்கிறதென்றும், வருவிக்கும் போட்டியிலும் மற்றக் கட்சிகளிடையே நிரசை வரலாம். ஜனநாயகம் வெறும் லட்சியமோ குறிக்கோளோ அல்ல. ஒரு நாடு தனது விவகாரங்களை நடத்திக்கொள்ள மூலமும் ஒரு வழிமுறை. இதன் பொருள் எல்லை வெளிக் வளர்ச்சியுடையும் சமுதாயம் ஒன்றில், சமூக மாற்றத்துக் கானவும் கட்டாயம் ஏதாவதொரு பிரிவைப் பாதிக்கக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்வது தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளுக்கு ஈடு கொடுப்பதால், மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குத் தனது ஆற்றலை நிரூபிப்பதுமான ஒரு முறையைத் தான் நீடியதாக இருப்பது முடியும். பெரும்பாலான மக்கள் உயிர் பிழைத்திருப்பதற்கே தவிக்கும்போது ஒரு சிலரின் ஆடம்பரத்தை—பண்டங்களுக்கான ஆடம்பரமோ, மனம்போனபடி எதையும் செய்யும் சர்வ சுதந்திரம் என்ற ஆடம்பரமோ—அவர்கள் பொறுப்பார்களா? ஒரு கட்சியோ அதன் மாற்றுகளோ எவ்வளவு தூரத்துக்கு மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கின்றன என்பது தான் முக்கியம்.

ஜாக்கிரதை அவசியம்

ஆண்டுகளின் போக்கிலே ஒருசில ஜனநாயக நாடுகளில் இரண்டு செல்வாக்கான கட்சிகள் மட்டுமே அரசியல் பணியில் தீவிரமாக இருப்பதென்ற வழக்கம் உருவாகியுள்ளது. ஆனால் இந்த நெறியிலிருந்து பிறழ்வு எதுவும் ஜனநாயகத்தின் சாரத்தை மங்கப்படுத்துமா? ஜனநாயக வழிகள் மூலம் பதவியடைய இயலாமை காரணமாகச் சில கட்சிகள் அரசியல் சாசன விரோதமான அல்லது அரசியல் சாசனத்திற்குப் புறம்பான சவால்களை விடுக்கப்புகலாம். இளம் ஜனநாயக நாடுகள் இம்மாதிரி விளைவுகளுக்கு எதிராக ஜாக்கிரதையாயிருப்பது அத்தியாவசியம். பிறகு அத்தகைய அரசியல் அமைப்புப் பரிகாரங்கள் மூலம் எதிர்ப்பது பலவீனமான, வேதனையான, கடினமானதாகிறது. ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு ஆளும் கட்சிக்கு மட்டுமுள்ள பொறுப்பல்ல. எதிர்க்கட்சிகளுக்கும், மொத்த மக்களுக்கும் பொறுப்புண்டு.

லிபரலிஸம் என்னும் விசாலத் தத்துவம், மார்க்ஸிசம் ஆகிய கோட்பாடுகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வகுக்கப்படும் போது இருந்ததைவிட மிகச் சிக்கலான இன்றைய சமூகப்பிரச்னைகளும் பொருளாதாரப் பிரச்னைகளும் இருக்கின்றன. பிரிட்டனிலும் அமெரிக்காவிலும்கூட, அவற்றின் ஜனநாயகக்கட்டமைப்பு புதிய பொருளாதார அழுத்தங்களை எதிர்த்து நிற்க முடியுமா என்ற விவாதம் தற்போது உள்ளது.

நிர்ப்பந்தித்து—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டம் அதிபர்கள் பணம் பெறக் கூடாதென்றும் பணம் செலுத்தாத பிள்ளைகளிடம் பாகுபாடு காட்டக் கூடாதென்றும் அமைச்சு இப்பணிப்பில் தெரிவித்துள்ளது. [ஸ்ரீ]

ஈட்டு வழக்கில் விற்பனைக்கான அதிகாரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கி. குமாரபாரதி 54, சிறி ஜினரட்ட தர்ம மாவத்தை,
கொழும்பு 9.
வாதி

இல. ஈடு/14729

எதிராக

பொன்னம்பலம் கைக்கேயன் கனகம்மா,
நாவலடி ரோட், வண், வட மேற்கு, யாழ்ப்பாணம்.
பிரதிவாதி

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் 14729 ஈடு இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னும் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு மாசி மாதம் 9-ந் திகதி (1977-2-9) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

ரூபா 3000/-. இதில் ரூபா 1500/-க்கும் 1975-1-29 தொடக்கம் 1976-3-11 வரைக்கும் 100/-க்கு 12% வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 100க்கு 5% வட்டியும் வழக்குச்செலவு ரூபா 596/30 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 384/65. நடைபெறவேண்டிய செலவு ரூபா 134-55. மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 77-10) கொடுக்க வேண்டியிருப்பதாலும்

குறித்த ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வட மேற்கிறை. முட்டிக்காவல் [illegible] பர. நில 6 3/4 பதிவு D 27/326. இதில் விக்கத் துண்டு பர நில. இல (3) மூன்று தெற்கும் பக்கமாக விற்றதுபோக மிகுதியான பர நில இல. 3 3/4 வீடும் கிணறும் பயிர்வகைகளும் இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு ஒழுங்கையும் சொக்கலிங்கம் [illegible] நிலையம் சங்கரப்பிள்ளையினுடையதும். தெற்கு வீரவாகு சிவகுரு பெண் பொன்னுஞம்.

க. சுப்பிரமணியம்,
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.

நம்பர் 89, 1-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்,
1-12-76.

5328

அமுதசுரபி அன்னதானம்

யாழ்ப்பாணம், புதன்

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் யாத்திரிகர்களின் அன்னதானசபையினர் அடுத்த மாதம் 3ம் திகதி [illegible] ஆலயத்தில் நடைபெறும் தைப்பூசத் திருவிழாவின் போது வழமைபோல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கவிருக்கின்றனர். இதற்கான ஏற்பாடுகளை சபையினர் இப்போதிருந்தே கவனித்து வருகின்றனர். (அ)

வவுனியாவில் பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம், செவ்

இலங்கை சாந்தி சேவாசங்க வவுனியாக்கிளை, வவுனியா மாவட்ட ரீதியான பேச்சுப் போட்டி ஒன்றை நடாத்தவிருக்கிறது.

வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் பெப்ரவரி மாதம் 20ம் திகதி காலை இப்பேச்சுப்போட்டி நடைபெறும்.

மூன்று பிரிவுகளாக நடைபெறவிருக்கும் இப்பேச்சுப் போட்டியில் ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம்.

விண்ணப்பங்களை பெப்ரவரி 15ம் திகதிக்குமுன் வவுனியா சாந்தி சேவா சங்கக்கிளை செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [ச]

சங்கத்தானையில் கூட்டுப்பிரார்த்தனை விசேஷவிழா

யாழ்ப்பாணம், புதன்

சாவகச்சேரி சங்கத்தானை மீனாட்சியம்பாள் ஆலயக்கூட்டுப் பிரார்த்தனை விசேஷவிழா இம்மாதம் 28ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது.

ஆலயமண்டபத்தில் பரிபாலன சபைத்தலைவர் சைவமணி வித்துவான் மு.சபாரத்தினம் தலைமையில் நிகழும் இவ்விழாவில் கூட்டுப்பிரார்த்தனை, அம்பாளுக்கு விசேஷ பூசை ஆராதனைகள் நடைபெறும். ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் அருளுரை வழங்குவார். தொடர்ந்து தொழிலதிபர் திருநெறிப்புரவலர் க.கனகராசா தம்பதிகளின் சேவைகளைப் பாராட்டும் நிகழ்ச்சி இடம்பெறும். இதனையடுத்து பண்ணிசைக் கலாநிதி எஸ். கே. சிவபாலனின் பண்ணிசைக் கச்சேரி நடைபெறும். (அ)

வரிவிளம்பரம்

பயிற்சி

வெளிநாடுகளில் வேலைபெற ஏற்ற பயிற்சிகள் மேல்நாடுகளில் பயிற்சி பெற்றவர்களால் நடாத்தப்படும். வெல்டிங் (Electric and Gas) இலெக்ரிக் வயறிங், ரேடியோ (Transistor). தொழில் புரிவோருக்கு விசேஷ மாலை நேர வகுப்புகளும் உண்டு. National Institute of Engineering Technology, சைற் மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 5298

விற்பனைக்கு

எலெக்ரோ பிளேட்டிங் செய்வதற்குரிய சகல பொருட்களும் கிடைக்கும். 29-1-77, 30-1-77 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9-00 முதல் மாலை 5-00 வரை பார்வையிடலாம். டியூரோ மெற்றல் இன்டஸ்றீஸ், 13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5315

நன்றி நவிலல்

6-12-76ல் எனது பாரியார் திருமதி அ. நாகரத்தினம் அம்மாள் தேகவியோகமடைந்தபோது நேரிலும், தபால் தந்திமூலமும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும், 5-1-77ல் நடைபெற்ற அன்னாரின் சிரார்த்தக் கிரியைகளின் போது பங்கு பற்றி உதவி செய்த பந்துமித்திரர்களுக்கும் நண்பர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கு. அருளம்பலம்,
இளைப்பாறிய உடையார்,
5324 திருக்கேதீஸ்வரம்.

வடபகுதி—

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

களையும் காண்கிறேன். இதிலிருந்து வடபகுதி விவசாயிகளின் ஊக்கத்தை அறிய முடிகிறது. வெங்காயம், மிளகாய் இறக்குமதித் தடை காரணமாகவே இவர்கள் அதிக நன்மை பெற முடிகிறது. அத்துடன் எமது அரசாங்கம் வடக்குக்கும் தெற்குக்குமிடையில் தங்கு தடையற்ற பண்டமாற்று நடைபெறுவதற்காக ஆனையிறவுத் தடைமுறையை அகற்றியுள்ளதும் வடபகுதி மக்களுக்குப் பெரும் நன்மை பயப்பதாகும்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபாலா, வலி. தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. குமாரசாமி உட்படப் பலர் உரையாற்றினர். (அ)

தரமான அச்சுவேலைகளுக்கு
கலாநிலையப் பதிப்பகம்
303, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

கொழும்புத்துறை
60, சுவாமியார் வீதியில் இருக்கும்
செங்கதிர் செல்வா இசைமனையில்
GR. 9 (N. C. G. E.) GR. 8
ஆகிய வகுப்பு மாணவர்கட்கு
0 கணிதம் 0 விஞ்ஞானம்
0 கேத்திர பொறிமுறை வரைதல்
0 விவசாயம் 0 ஆங்கிலம்
0 சமூக அறிவியல் 0 தமிழ்
ஆகிய பாடங்களில்
°° போதனை வகுப்புக்கள் °°
பயிற்றப்பட்ட தரமான ஆசிரியர்களால்
1—2—77 தொடக்கம் நடாத்தப்படும்
விபரங்கட்கு:
ந. நகுலேஸ்வரன்,
26/6, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை.
5326

ரொடீஷியா: தீர்வுக்கான இறுதி முயற்சியும் தோல்வி!

'பாரதூரமான விளைவு ஏற்படும்'

பிரி. பிரதிநிதி எச்சரிக்கை

சாலிஸ்பரி, ஜன 25

ரொடீஷியப் பிரச்னையைச் சமூகமாகத் தீர்த்து வைக்க எடுக்கப்பட்ட இறுதி முயற்சியும் தோல்வியில் முடிந்துள்ளது.

ரொடீஷியாவின் கறுப்பரின் இடைக்கால ஆட்சியை ஏற்படுத்தும் வகையில் பிரிட்டன் தெரிவித்திருந்த புதிய திட்டத்தை ரொடீஷியாவின் சிறுபான்மை வெள்ளையர் ஆட்சியின் பிரதமர் திரு. இயன் ஸ்மித் நிராகரித்துள்ளார்.

ரொடீஷிய விவகாரம் தொடர்பான பிரிட்டனைச் சேர்ந்த ஜெனிவா சமாதான மாநாட்டுத் தலைவர் திரு. ஐவர் ரிச்சேட் திரு. இயன் ஸ்மித்துடன் இத்திட்டம்பற்றி விளக்கிக்கூறி 45 நிமிடங்கள் பேச்சுவார்த்தையின் பின் இத்திட்டத்தை திரு. ஸ்மித் நிராகரித்துவிட்டார்.

இதேவேளை, பிரிட்டனின் புதிய திட்டத்தை ரொடீஷிய வெள்ளையர் அரசு நிராகரித்துள்ளது. பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் திரு. ஐவர் ரிச்சேட் கூறியுள்ளார். 'ரொடீஷிய வெள்ளையர்கள் இத்திட்டத்தை நிராகரித்துள்ளது துரதிர்ஷ்டமானது. இந்நிலையில் ஜெனிவா மாநாட்டை மீண்டும் நடத்த முடியுமா? என்பது சந்தேகம் தான்' என்று திரு. ரிச்சேட் மேலும் தெரிவித்திருக்கிறார்.

தொலைக்காட்சி ஒன்றில் தோன்றிய திரு. ஸ்மித் 'நமது பாதை சரியானதாக இருக்கையில் நாம் சரணடைவது என்பது சாத்தியமில்லை' என்று கூறியுள்ளார்.

இதற்கான விளைவுகளை ரொடீஷியப் பிரதமரே ஏற்க வேண்டும் என்று பிரிட்டிஷ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [ஸ்ரீ]

வெள்ளைமாளிகை அதிகாரிகள்

ஆட்டத்துக்கு இடமில்லை: கார்ட்டர் உறுதி

வாஷிங்டன், ஜன 25

அமைச்சர்களையும் மீறி 'வெள்ளை மாளிகை' அதிகாரிகள் நடந்து கொள்வதைத் தாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் தெரிவித்துள்ளார்.

மாஜி ஜனாதிபதி நிக்ஸனின் ஆட்சியின்போது 'வெள்ளை மாளிகை' அதிகாரிகளின் அதிகாரமே ஆட்சிபீடத்தில் கூடியிருந்தது என்ற பொதுவான குற்றச்சாட்டு இருந்துவந்தது. [ஸ்ரீ]

இணக்கசபை விசாரணையின் போது மோதல்!

பருத்தித்துறை, செவ்வாய்

நெல்லியடிப் பட்டணசபைப் பகுதிக்கான இணக்கசபையில், விசாரணைகள் நடந்து கொண்டிருந்தபோதே கட்சிக்காரரிடையே ஏற்பட்ட காரசாரமான வாதம், மோதலிலேயே முடிவடைந்தது.

இதனுல் விசாரணைகள் சில நிமிடங்களில் இடைநிறுத்தப்பட வேண்டியும் ஏற்பட்டது.

கடந்த ஞாயிறு பகல் நடைபெற்ற இவ்விசாரணையொன்றின்போதே இவ்வசம்பாவிதம் ஏற்பட்டது.

இந்தியக் குடியரசு தினக் கூட்டம்

கொழும்பு, செவ்வாய்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளை இந்தியக் குடியரசு தினத்தை இம்மாதம் 26ம் தேதிமாலை பம்பலப்பிட்டி லொறிஸ்வீதி 51ம் இலக்க இல்லத்தில் கொண்டாடவிருக்கிறது.

கிளைத்தலைவர் ஈழவேந்தன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் திரு யோகேந்திரன் துரைசாமி, இந்தியவிடுதலைக்கு மகாத்மா காந்தியும், சுபாஸ் சந்திரபோசும் ஆற்றிய பணி என்னும் தலைப்பில், சிறப்புரை நிகழ்த்துவார்கள். (ஆ

---

3 மாதத்திற்கு மேலாகியும்...

சுழிபுரம், செவ்

சுழிபுரம் தபால் கந்தோர் மூலம் தபாற்கந்தோர் சேமிப்பு புதிய புத்தகத்தை எடுப்பதற்காக கடந்த ஐப்பசி மாதக் கடைசியில் கொழும்பு சேமிப்புக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு பழைய புத்தகம் அனுப்பி வைக்கப்பட்டது. புதிய புத்தகம் மாதம் மூன்றுக்கு மேலாகியும் இதுவரை உரியவருக்குக் கிடைக்கவில்லை. புத்தகச் சொந்தக்காரர் தனது அவசிய தேவைக்குப் பணம் எடுக்க வேண்டியிருந்தும் புத்தகம் வந்து சேராததால் பணம் எடுக்க முடியாது பெரிதும் அவதிப்படுகின்றார். தனது புதிய பாஸ் புத்தகத்தை உடனடியாக அனுப்பிவைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பாஸ்புத்தக உரிமையாளர் வேண்டியுள்ளார். [ஆ

பாகிஸ்தான் பொதுத்தேர்தல்:

மக்கள் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்

பிரதமர் பூட்டோ செலவிட்டார்

ராவல்பிண்டி, ஜன 25

எதிர்வரும் மார்ச்மாதத்தில் நடைபெறவிருக்கும் பாகிஸ்தான் பொதுத் தேர்தலுக்கு தனது மக்கள் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை பாகிஸ்தான் பிரதமர் ஜுல்பிகார் அலிபூட்டோ வெளியிட்டுள்ளார்.

பொருளாதார சமூக முன்னேற்றத்தில் மாற்றம் ஏற்படும் என்றும் 7 கோடி 20லட்சம் மக்களின் நல்வாழ்வுக்கு ஐந்தாண்டுத்திட்டம் செயற்படுத்தப்படுமென்றும் கட்சி சோஷலிஸ பொருளாதாரக் கொள்கைகளை செயற்படுத்தும் என்றும் இவ்விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஸ்ரீ]

Chemicare
baby
powder

குழந்தைப் பராமரிப்புக்கு
உன்னதமானது
கெமிகெயர்

குழந்தைப்பராமரிப்புக்கு மிக
நவீனமானதும், சிறந்ததும் கெமிகெயர்.
அது இறகுபோன்று மென்மையானது ...
உன்னதமான டால்க் கொண்டு
விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டது ...
குழந்தையின் மிருதுவான சருமத்திற்கு
குளிர்மையும், இதமும் அளிப்பது ....
குழந்தையை மகிழ்ச்சியாக,
இன்முகத்துடன் வைத்திருப்பது.

அன்னையின் பரிவுக்கு
அடுத்தது கெமிகெயர்

CIC
ஏக முகவர்கள்:
கெமிக்கல் இன்டஸ்ரீஸ்
(கொழும்பு) லிட்.,
த. பெ. எண் 352, கொழும்பு.

இலவசமாக உங்கள் குழந்தையின் புகைப்படம்.

கெமிகெயா பேபி டல்க் டின்கெற்றிலிருந்து 3 இறகுகளை வெட்டி எடுத்து எமக்கு அனுப்புங்கள். நாம் உங்கள் குழந்தையின் புகைப்படத்தை இலவசமாக, வசதியான ஒரு ஸ்ரூடியோவில் எடுப்பதற்கு ஏற்பாடு செய்வோம்

தயவு செய்து இறகுகளை
கெமிகெயர்
த.பெ.1610 கொழும்பு
என்ற விலாசத்திற்கு அனுப்பவும்

இந்திய ஜனநாயகத்தின் அடிநாதம்!

இந்திராகாந்தி விளக்கம்

நமது நீண்ட வரலாற்றின் உயர்வுகள், தாழ்வுகள் ஆகியவற்றின் நெடுகிலும், நல்ல காலங்களிலும், கெட்ட காலங்களிலும், சுதந்திரம் தழைத்த காலங்களிலும், கட்டுண்டு கிடந்த காலங்களிலும், நமது ஆன்மா வளைந்து நலிவுற்றது ஒருகாலும் கிடையாது. மனிதப்பிறவியின் அடிச்சாரமாகிய மனிதத்தன்மையே அந்த ஆன்மா. தன்னோடும் தன் சூழலோடும் இசைபட வாழும் ஒரு சமுதாயத்தை பூசலிலிருந்து விடுபட்ட ஒரு புவனத்தை, நாம் கற்பனை செய்கிறோம். நமது உலகப் பார்வையிலே, குழப்பம் அனைத்தும் ஒழுங்கிலே ஒடுங்குகிறது. பூசல் அனைத்தும் இசைவிலே மறைகிறது. அவை எல்லாம் அமைதியிலே அடங்குகிறது. மனிதன் வெளிப்போந்து உயரிய நோக்கங்களுக்காக உயிர்வாழ்கிறான். நாம் ஓய்வின்றி தேடுவது இதுவே.

இன்று இந்தியக் குடியரசுதினம் அதையொட்டி பிரதமர் இந்திராகாந்தியின் இந்த உரை வெளிவருகின்றது. 22-வது சாம்ராஜ்ய நாடுகள் மகாநாட்டில் நிகழ்த்தியது.

சாம்ராஜ்யத் தொடர்பால் எங்களுக்கு என்னதான் வேதனை நேர்ந்தபோதிலும், ஐரோப்பாவின் அரசியல் கருத்துக்களோடும் விஞ்ஞானக் கருத்துக்களோடும் அறிமுகமும் அதனால் எமக்குக் கிட்டியது. இரவல்புத்தன்மைக்கு, பிறர் அனுபவத்தைச் சொந்த அனுபவமாகப் பரிணமம் செய்துகொள்ளும் ஆற்றலுக்கு பாரதம் எப்போதுமே பெயர் பெற்றது. எங்களுடைய அரசியல் சாஸனத்தை வரைகையில், சில காமன்வெல்த் நாடுகளின் அனுபவத்தையும் வேறு ஜனநாயக நாடுகளின் அனுபவத்தையும் நாங்கள் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். ஆனால் எங்கள் அரசியல் சாஸனத்துக்கு உருக்கொடுத்ததும், அது செயற்படுவதற்குச் சக்தியை அளித்ததும் எங்கள் சங்கற்பமே. நீண்ட ஆண்டுகளின் போராட்டத்தினாலும் துன்பத்தினாலும் உருவான சங்கற்பம். அப்போராட்டம் உலகிலேயே மிகப்பெரியதான மக்கள் இயக்கமாயிருக்கக்கூடும். பணபலமும் படைபலமும் பண்ட பலமும் எம்மிடம் இருக்கவில்லை. இந்த வையத்து மக்களில் எல்லாம் தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, பாழ்பட்டு, நம்பிக்கை இழந்திருந்த பாரத மக்களை மகாத்மா காந்தி எழுச்சியுறச் செய்தது நம்காலத்து அற்புதங்களில் ஒன்று. அந்தஸ்து, செல்வம், மதம், மொழி, ஆண், பெண் என்றெல்லாம் பார்த்துக்கொண்டிருக்காமல் எல்லோரும் ஒரே லட்சிய நோக்குடன், பணியாற்றும்படி செய்த மகாத்மா அவர். பாரதம் விடுதலை அடைந்ததென்றால், விடுதலை அடைந்தே தீருவதென நாங்கள் சங்கற்பம் செய்து கொண்டு அதற்காக உழைத்ததே காரணம். 1922இல் மகாத்மா காந்தி, சுயராஜ்யம் பிரிட்டிஷ் பார்லிமெண்டின் நன்கொடையாக வராது என்று பாரதத்தின் முழுமையான எண்ணத்தின் அறிவிப்பாய் இருக்கும் என்றும் கூறினார். 'பார்லிமெண்ட் சட்டம் ஒன்றின் மூலம் அது அறிவிக்கப்படும் என்பது உண்மையே. ஆனால் பாரத நாட்டின் விருப்பத்தை மரியாதைக்காக ஊர்ஜிதம் செய்வதாகவே அது இருக்கும்'

1947இல் அ[illegible]ன் நட[illegible]லும் தே[illegible] முடிவு. [illegible]து. சமரச உணர்வுடனும் இருதரப்பிலும் அரசியல் விவேகத்துடனும் நடந்த நிகழ்ச்சி இது.

தேசியப் போராட்டத்தில் லட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்டதால், ஒரு சிலருக்கு மட்டுமே தனியே ஒதுக்கும் இயல்பானதை எதையும் சுதந்திர பாரதம் புறக்கணிப்பது இயற்கையே. மிகவும் விரிவான அடிப்படையில் எல்லோரும் கலந்துகொள்ளும் ஜனநாயகமே நாங்கள் ஏற்கக்கூடியதாயிருந்தது. நாங்கள் இதைத் தெரிந்தெடுத்தோம் என்றால் பிரிட்டனைப் பின்பற்ற விரும்பி அப்படிச் செய்யவில்லை. பாரத அரசியல் சாசனத்தை வகுத்தவர்களுக்கு ஜனநாயகத்தின் வேறு வடிவங்கள் தெரியாது என்பதற்காகவும் அப்படிச் செய்யவில்லை. பாரதநாட்டின் உண்மை நிலைக்கு மிகவும் ஏற்றது என்பதாலேயே அதை ஏற்றோம். விரும்பிச் செய்த முடிவு அது. எங்கள் போராட்டத்தின் அஹிம்சை இயல்பாலும், அமைதியான, ஒழுங்கான மாறுதலின் எங்கள் நாட்டத்தாலும், முடிவான அதிகாரம் மக்களுடையதாக இருக்க வேண்டும் என்ற எங்கள் உறுதி

ஜனநாயகத்தின் முடிவு

ஜனநாயகம் என்பது மாறுபடும் பொருளுடையது. வெவ்வேறு முடிவுடையது. அந்தந்த நாட்டின் மக்கள் தொகையில் விதவிதமான இயல்பு அல்லது ஒரேமாதிரியான இயல்பு, பொருளாதார முன்னேற்றத்தின் நிலை முதலியவற்றுக்கேற்ப அது மாறுபடும். காலனி முறைக்கு அடுத்த காலத்தில் பல காமன்வெல்த் உறுப்பு நாடுகள் பிரிட்டிஷ் அரசு முறையை மேற்கொண்டன. ஆனால் பிறகு தத்தம் நிலைமைக்கேற்ப மாற்றங்கள் செய்துகொண்டன. அரசியல் சாசனங்கள் அசைவின்றி நிலைகுத்தி நிற்பவை அல்ல. எங்கள் அரசியல் சாசனம் ஏற்கப்படும் சமயத்திலேயே ஜவஹர்லால் நேரு அற்புதமான உள்ளறிவுடன் இவ்வாறு சொன்னார். 'மகத்தான நாடு ஒன்றின் ஆற்றல் பிறிக்கொண்டு வெளிப்படுவதைச் சுதந்திரபாரதம் காணும். அது என்ன செய்யும், என்ன செய்யாது என்று நானறியேன். ஆனால் எதாலும் கட்டுண்டு கிடப்பதற்கு அது இசையாது. நாம் இப்போது செய்வது இன்னும் பத்தாண்டு அல்லது இருபதாண்டுக்குத் தொடப்படமாட்டாது என்று சிலர் கற்பனை செய்கிறார்கள். புரட்சிகரமான மாறுதல்களின் துவக்கத் தறுவாயில் நாம் உள்ளோம் என்று இந்த அவை உணர வேண்டும் என்று நான் ஆவலுறுகிறேன். புரட்சிகரம் என்றால் அச்சொல்லின் முழுப் பொருளிலும் புரட்சிகரம். ஏனென்றால் ஒரு நாட்டின் ஆன்மா அதன் தளைகளைத் தகர்க்கையில் விசித்திரமான வழிகளில் அது செயற்படுகிறது. விசித்திரமானதாகவே அது செயற்பட்டாகவேண்டும். இந்த அவைவருக்கும் அரசியல் சாசனம் அந்த சுதந்திர பாரதத்துக்குத் திருப்தி அளிக்காமற்போகலாம். இந்த அவை அடுத்த தலைமுறையினரையோ இப்பணியில் நமக்கு அடுத்தபடியாக முறைப்படி வருவோரையோ கட்டிப்போடவோ முடியாது.''

இதே நோக்குடன் ஜவஹர்லால் நேரு அரசியல் சாசனங்கள் மக்களுக்காக இயற்றப்படுகின்றனவேயன்றி இதற்கு மாறாக அல்ல என்பதையும், ஜனநாயகம் மாற்ற முடியாத ஒரு கடுத்தமான கருத்து

[2-ம் பக்கம் பார்க்க]

நம்காலத்து அற்புதம்

நம்பிக்கை இழந்து கிடந்த பாரத மக்களை மகாத்மாகாந்தி எழுச்சியுறச்செய்தது நம் காலத்தில் நடந்த அற்புதங்களில் ஒன்று.

—இந்திராகாந்தி

அரசியலில் ஜனநாயகம்

அரசியல் துறையில் ஜனநாயகம் என்பது சிறு கும்பல்கள் பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமது தேவைகளைச் சாதித்துக் கொள்வதும் சமுதாயத்தையே சீரழிக்கச் செய்வதும் அல்ல. தேசிய சொத்துக்களை மிகவும் மதிப்பதே ஆகும்.

—இந்திராகாந்தி

இந்திய குடியரசு தின
வைபவத்தன்று
ஸ்டேட் பாங்க்
ஒப்
இந்தியா
தங்கள் சேவைகளை
இந்திய குடியரசிற்கு
திரும்பவும் அர்ப்பணிக்கிறது.

5600, அலுவலகங்களுடன் (இதனுடன் இணைந்துள்ளவற்றையும் சேர்த்து) உலகம் முழுவதிலுமுள்ள தொடர்ச்சியான கடிதப் போக்குவரத்துச் சேவையாளர்களுடன், இந்த வங்கி ஓர் சம்பூரண வங்கிச் செயல் வசதிகளை வழங்கக்கூடிய நிலைமையில் இருக்கின்றது.

மத்திய அலுவலகம் : பம்பாய்
உள்நாட்டு தலைமை அலுவலகங்கள் ; ஆமதாபாத், போப்பில், பம்பாய், கல்கத்தா, ஹைதராபாத், கான்பூர், சென்னை, புதுடில்லி, பட்னா.
வெளிநாட்டு அலுவலகங்கள் : கொழும்பு (ஸ்ரீ லங்கா) லண்டன் (ஐக்கிய ராஜ்யம்) (நான்கு கிளைகள்—கிறெஷம்ஸ்ரட், வெஸ்ற்எண்ட், சவுதோல் அண்ட் கோல் டர்ஸ் கிறீன்), நியூயோர்க் அன் சிக்காக்கோ (யூ. எஸ் ஏ). பிருங்பேர்ட் (மேற்கு ஜெர்மனி) மேல் (மாலைதீவு குடியரசு). டக்கா (பங்களாதேஷ்) அண்ட் நாசோ (பஹமாஸ்).
பிரதிநிதித்துவ அலுவலகங்கள் : பிருங்பேர்ட் (கிழக்கு மேற்கு ஐரோப்பாவிற்கு) பஹ்றயின் (பஹ்றயின்), டொறன்ரோ (கனடா), ரெஹ்ருன் (ஈருன்)

தந்தி விலாசம் :
"THISTLE"

தொலைபேசி :
ஏஜன்ஸி : 23856
அலுவலகம் : 26133
26134
26135

உள்ளூர் கிளை:
16, சேர் பாரன் ஜயதிலக மாவத்தை,
கொழும்பு - 1.

இந்திய குடியரசு தினத்தன்று
இலங்கை வாழ் மக்களுக்கு
எங்கள் நல்வாழ்த்துக்கள் !

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்திலும்
உள்நாட்டுத் தொழில் வளத்திலும்
உரிய பணியாற்றும்,

இந்தியன் வங்கி
48, பெயிலி வீதி, கொழும்பு-1.

rod taylor
PARTIZAN

RIO (Jaffna) Daily 10-30, 4-45. 7-15, 9-45
The picture of the year
The story of freedom fighters - Men who were prepared to die on their feet than live on their bended knees.
A classic WAR Film

ராணி (யாழ்-நகர்)
∴ ஜெய்சங்கர் ∴ லக்ஷ்மி
∴ ஜெயா ∴ முத்துராமன்
நடித்த
தினசரி 4 காட்சிகள் கடைசி வாரம்
கனிமுத்து பாப்பா

வெலிங்டன் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—மஞ்சுளா—ஜெயசுதா—நாகேஷ்
நம்பியார் நடித்த
மன்னவன் வந்தானடி
(ஈஸ்ட்மன் கலர்)

லிடோ தினசரி 4 காட்சிகள் [யாழ்.நகர்] போன்: 7693
ஏ. வி. எம். ராஜன்-லதா
நடித்த
வீட்டுக்கு வந்த மருமகள்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - மஞ்சுளா
சந்திரகலா - லதா
நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
(ஈஸ்ட்மன் கலர்)

றீகல் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
ஏ. வி.எம்.ராஜன்-புஷ்பலதா
பால்குடம்

கடைசி இரண்டு தினங்கள்
மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - மஞ்சுளா
சந்திரகலா - லதா
நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
28-1-77 முதல் மக்கள் திலகத்தின்
வெள்ளிவிழா சித்திரம் இதயக்கனி

'இன்றைய அரசு

வடக்கை வாடவிட்டு தெற்கை வாழச்செய்கிறது''

உடுப்பிட்டி எம். பி உரை

பருத்தித்துறை, சென். "சனசமூக நிலையங்கள் வெறும் பொழுதுபோக்குக் கழகங்களாக இல்லாது சமுதாய வளர்ச்சிக்கான சுதந்திர சிந்தனையையும் விழிப்புணர்ச்சியையும் தூண்ட வேண்டும். சுதந்திர இயக்கமான இதுபோன்ற நிலையங்களே அரசியலிலும் பல சாதனைகளை நிலைநாட்ட முடியும்."

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. க. ஜெயக்கொடி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற சனசமூக நிலையங்களின் சமாச விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

திரு. ஜெயக்கொடி தொடர்ந்து கூறியதாவது:-

"இன்றைய அரசு வடக்கை வாடவிட்டு, தெற்கை வாழச் செய்யும் நோக்குடன், இம்மண் பகுதிகளுக்குக் கூடுதலான நிதி ஒதுக்கீடுகளைச் செய்துவருகிறது.

இந்நிலையில் சிரமதானங்கள் போன்ற சமுதாயத் தொண்டுகள், சுகாதாரம், மற்றும் அறிவுச் சேவை போன்றவற்றுக்கு அரசைமட்டுமே நம்பியிருக்காது, மக்கள் தாங்களே செய்ய முன்வரவேண்டும். அதன் மூலமாகவே சமுதாய முன்னேற்றத்தையும், நாட்டின் அபிவிருத்தியையும் உறுதிப்படுத்த முடியும்.

சமாசத் தலைவர் திரு. எஸ். நல்லதம்பி தலைமையில் நடந்த இவ்விழாவில் பேச்சு, இசை, நடனம், நாடகப் போட்டிகளும் இடம் பெற்றன. வெற்றிபெற்றோருக்கு திரு. ஜெயக்கொடி பரிசில்களை வழங்கினார். (உ)

சென். ஹென்றீஸை அரசு பொறுப்பேற்றது

பண்டத்தரிப்பு, செவ்வாய்

இதுவரை காலமும் தனியார் கல்லூரியாக இயங்கி வந்த இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி இவ்வருடம் தொடக்கம் கல்வி இலாகாவின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. (உ)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
விஜயகுமார்-சுஜாதா
அவன் ஒரு தொடர்கதை

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30
சிவாஜி - விஜயா
தங்கப்பதக்கம்

நாகஸ்
[சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
விஜயகுமார் - சுஜாதா
மயக்குகிறாள் ஒருமாது

சுவீப் முடிவுகள்

[illegible] நேற்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 600-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு
78 K 0195
ரூ. 1,00,000-00

2-வது பரிசு
30 S 0161
ரூ. 40,000-00

3-வது பரிசு
49 L 0092
ரூ. 10,000-00

தலா ரூபா 3000/- பரிசு பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

60 A 0595
82 A 0917
82 A 0790
49 B 0917
72 C 0365
42 C 0062
77 D 0809
01 E 0543
18 E 0380
84 F 0380
85 G 0642
19 G 0278
78 G 0743
85 G 0582
46 H 0820
22 J 0388
50 J 0844
73 K 0150
45 K 0717
61 L 0189
80 L 0642
79 M 0464
29 M 0968
34 N 0788
25 N 0818
12 O 0357
48 O 0734
21 O 0867
18 P 0071
64 Q 0274
61 R 0766
81 R 01 1
88 S 0212
33 S 0985
64 S 0531
31 S 0169
48 S 0316
03 S 0904
37 T 0183
60 T 0376
88 U 0117

88 A 0402
36 A 0860
83 A 0293
70 B 0359
48 C 0892
27 D 0198
46 E 0033
72 E 0661
3 F 0104
41 F 0835
06 G 0309
64 G 0392
03 G 0610
02 H 0137
64 J 0481
69 J 0493
01 K 0352
56 K 0042
17 K 0080
81 L 0148
84 M 0351
29 M 0461
37 N 0233
27 N 0156
11 N 0467
39 O 0382
76 O 0279
65 P 0263
32 Q 0543
51 R 0643
29 R 0633
41 R 0600
78 S 0050
27 S 0444
63 S 0493
53 S 0098
80 S 0894
05 T 0790
12 T 0285
79 T 0393
12 U 0973

திருநெல்வேலி கொலை:

எதிரிக்கு இரண்டு வருட சிறை

யாழ்ப்பாணம், புதன்

திருநெல்வேலி கொலை வழக்கின் எதிரிக்கு 2 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ் வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. எம். எம். அப்துல் காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. இவ் வழக்கில் திருநெல்வேலியில், பொன்னன் பேரின்பநாயகத்தை கொலை செய்ததாக தங்கவேல் சபாரத்தினம் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஜிம்மி ராஜரத்தினம் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி எஸ். ஸ்ரீரஞ்சன் வழக்கை நடத்தினார்.

ஜூரி சபையினர் எதிரி, தற்பாதுகாப்புக்காக கைமோசக் கொலை புரிந்துள்ளதாக ஏகமனதாக தீர்மானித்ததை தொடர்ந்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் [illegible] கழக ஆதரவில் யாழ். முற்றவெளி மைதானத்தில் நடந்த மாட்டுவண்டி சவாரிப்போட்டி முடிவுகள் வருமாறு:

'ஏ' பிரிவு: ஆர். திருநாவுக்கரசு (பண்டத்தரிப்பு), ஆர். செல்வராசா (பண்டத்தரிப்பு), கே. சுப்பையா (நவக்கிரி).

'பி' பிரிவு: எஸ். ரவீந்திரன் (மட்டுவில்) எம். செந்தில்வாசன் (அளவெட்டி). டி. சின்னராசா (அச்சுவேலி).

'சி' பிரிவு: கே. இராசையா (அச்சுவேலி), கே. யோகன் (அச்சுவேலி), சி. கந்தசாமி (பண்டத்தரிப்பு). [உ-அ]

சைவ அபிவிருத்திக் கழகம்

யாழ்ப்பாணம், புதன்

சந்தைபரிமடம்- ஸ்ரீ கற்பக விநாயகராலய சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் 23வது வருடாந்தப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இதில் இவ்வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர் வித்திய சிரோன்மணி க. சிதாரநாதன் இசிகர். தலைவர் செ. சுப்பிரமணியம், செயலாளர் வே. குகநேசன் உபதலைவர்கள் ஆ. கோபாலபிள்ளை, சு. பாலசுப்பிரமணியம் உபசெயலாளர் ம. கணேசலிங்கம். நூலகம் பொறுப்பாளர் ச. மகேந்திரராஜா. பரீட்சைச் செயலாளர் வ. கந்தசாமி. (உ)

35 U 0110
20 U 0261
81 V 0750
78 V 0241
19 W 0921
83 W 0260
61 X 0999
15 Y 0231
21 Z 0043

13 U 0838
81 U 0952
50 V 0955
67 W 0727
34 W 0949
68 X 0671
19 X 0448
11 Y 0156
79 Z 0669

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

தென்னகத்தில் 175 நாட்களுக்கு மேல்
ஓடிய வெள்ளி விழாச் சித்திரம்
வின்ஸர் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
★ கமலஹாசன் ★ ஸ்ரீவித்யா
★ சுந்தரராஜன் ★ ஜெயசுதா ★ நாகேஷ்
நடித்த K. பாலசந்தரின்
அபூர்வ ராகங்கள்
என்னுடைய அப்பா யாருக்கு மாமனாரோ அவருடைய மருமகளின் அப்பா என் மகனுக்கு மாமனார் ஆனால் அவருக்கும் எனக்கும் என்ன உறவு?
இது தான் கதை

ராஜா யாழ்.நகர் 3-வது வெற்றி வாரம்
ஜெய்சங்கர் - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த

தாய்க்கு ஒரு பிள்ளை

ஈழநாடு
The EELANADU

வவுனியா சுகாதாரப்பிரிவு யாழ்ப்பாணத்துடன் இணைப்பு!

பண்டத்தரிப்பு, செவ்வாய்

இதுவரை தனியான சுகாதார அத்தியட்சகர் பிரிவாக இயங்கி வந்த வவுனியா பகுதி சுகாதார சேவைப் பிரிவு இந்த ஆண்டு தொடக்கம் யாழ். மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகர் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது.

சுகாதார இலாகா தலைமைப் பீடம் எடுத்துள்ள இந்தப் புதிய முடிவின் பிரகாரம் வவுனியாவில் இதுவரை காலமும் இயங்கி வந்த வவுனியா சுகாதாரசேவை அத்தியட்சகர் அலுவலகம் மூடப்படும். யாழ். மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகரின் நிர்வாகத்தின்கீழ் வவுனியாப் பிரிவு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் வவுனியா சுகாதாரசேவை அத்தியட்சகர் அலுவலகத்தில் கடமையாற்றிய சுமார் 40க்கு மேற்பட்ட ஊழியர்கள் இம்மாதம் தொடக்கம் யாழ்ப்பாணத்திலுள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகத்தில் கடமையாற்றும் பொருட்டு வந்துள்ளனர். (ஏ)

கீரிமலை- ஸ்கந்தபுரம் பஸ் சேவை

பண்டத்தரிப்பு, செவ்.

கீரிமலையிலிருந்து ஸ்கந்தபுரத்திற்கு நேரடி பஸ் சேவை இம்மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தினசரி காலை 5 மணிக்கு கீரிமலையிலிருந்து புறப்படும் இந்த பஸ் வண்டி பண்டத்தரிப்பு- யாழ்ப்பாணம் ஊடாகச் சென்று ஸ்கந்தபுரத்தை முற்பகல் 10 மணிக்கு அடைகின்றது.

இப்புதிய நேரடி பஸ்சேவையினால் இப்பகுதியிலிருந்து அக்கராயன்குளம், கோட்டைகட்டியகுளம், வன்னேரிக்குளம், ஸ்கந்தபுரம் ஆகிய இடங்களில் விவசாயச் செய்கையில் ஈடுபட்டுள்ள பெருந்தொகையினரான விவசாயிகளுக்கு அதிக நன்மை கிடைத்துள்ளது.

இந்த பஸ் சேவையை ஒழுங்கு செய்து நடாத்தும் கிளிநொச்சி இ. போ. ச. டிப்போ அதிகாரிகளுக்கு இவ்விவசாயிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (ஏ)

ஸ்ரீ ல. சு. க. தேர்தல் விஞ்ஞாபனம்:

'வடபகுதி விவசாயிகளும் ஆலோசனை தெரிவிக்கலாம்'

—தபாலமைச்சர்

மாவிட்டபுரம், திங்கள்

"ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்படுகிறது. இவ்விஞ்ஞாபனத்திற்கு கல்விமான்கள் போன்றவர்கள் மட்டும் தான் ஆலோசனை வழங்கவேண்டுமென்றில்லை. வடபகுதி விவசாய மக்களும் தமது ஆலோசனைகளைத் தெரிவித்தால் அவற்றையெல்லாம் இவ்விஞ்ஞாபனத்தில் சேர்த்து அவ்விஞ்ஞாபனத்தை மக்கள்முன் சமர்ப்பித்துத் தேர்தலில் நிச்சயம் அடுத்த முறையும் ஆட்சிக்கு வந்து அவற்றையெல்லாம் நிறைவேற்றுவோம்."

இவ்வாறு சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கிக் கிளையொன்றை ஒம்பிளான் கிராமத்தில் திறந்துவைத்துப் பேசிய தபாலமைச்சர் திரு. செ. குமாரசூரியர் கூறினார்.

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. க. விநோதன் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"பட்டணவாசிகள், வணிகர்கள், முதலாளிகள் ஆகியோருக்காகவே முன்னர் வங்கிகள் சேவைபட்டுவந்துள்ளன. ஆனால் தற்போது விவசாய, தொழிலாளிகளுக்காகவும் அவை இயங்குகின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் கிராமிய பொருளாதாரத்தை வளர்க்க எடுத்த நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று. தமது நாட்டிலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளுள் தமது கட்சிதான் விவசாய, தொழிலாளிகளுக்காகப் போராடும் கட்சியாகும்.

"தமிழரசு, காங்கிரஸ் கட்சிகள் மொழி மற்றும் விஷயங்களிலேயே கவனம் எடுக்கின்றன. கிராமிய பொருளாதாரத்தை வளர்த்து கிராமிய மக்களை வளர்த்தெடுக்காமல் எப்படி மொழி, கலை, கலாச்சாரங்களை வளர்க்கமுடியும்? சிங்களம், தமிழ் இரு மொழிகளும் உயரவேண்டுமானால் சிங்கள, தமிழ் மக்கள் உயரவேண்டும். இதுதான் நமது கொள்கையாகும்.

"அமரர் பண்டாரநாயக்கா காலத்திலிருந்தே எமது கட்சி சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளை இந்நாட்டின் தேசிய மொழிகளாகப் போற்றி வளர்த்துவந்துள்ளது. இன்று சிங்களம் அல்லது தமிழ் விசேஷ சித்தியிருந்தால்தான் ஒரு உத்தியோகம்கூட பெற முடியும். ஆங்கிலம் இப்போது தேவையில்லை.

"வடபகுதியில் கிராமிய வங்கிகளைக் கொள்ளையடிக்கும் முயற்சிகள் பல கடந்த காலங்களில் இடம் பெற்றுள்ளன. கிராமிய பொருளாதாரம் வளர்வதைத் தடுக்கும் பயங்கரவாத சக்திகளே இப்படியான முயற்சிகளில் ஈடுபடுகின்றன. ஆனால் இதற்காக நாம் வங்கிகள் நிறுவுவதை நிறுத்திவிடப்போவதில்லை. தொடர்ந்து நிறுவியே வருவோம். இவ்வங்கிகளை கிராம மக்கள் தம் சொந்த வங்கி என நினைத்துப் பாதுகாக்கவேண்டும்."

அனுரா பேச்சு

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வாலிப முன்னணி அமைப்பாளர் திரு. அனுரா பண்டாரநாயக்கா உரையாற்றுகையில் கூறியதாவது:-

"12 தடவைகளுக்கு மேல் வடபகுதிக்கு விஜயம் செய்துள்ள நான் ஒவ்வொரு முறையும் வரும்போதும் புதிய புதிய வெங்காயத் தோட்டங்களையும், மிளகாய்த் தோட்டங்

[2-ம் பக்கம் பார்க்க]

ஒருதுளி ரத்தமும்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரகசிய வாக்கெடுப்பு நடத்திய பின்னரே வேலை நிறுத்த நடவடிக்கை பற்றி முடிவு செய்யும். ஆனால் நம் நாட்டிலோ தொழிற்சங்கத் தலைவர்கள் தமது கொழும்பு அலுவலகங்களில் கூடி வேலை நிறுத்த முடிவுபற்றி தம் அங்கத்தவர்களுக்கு அறிவிக்கின்றனர். திட்டமிட்ட அரசியல் சதியான இவ்வேலை நிறுத்தங்கள் குறித்து அரசாங்கம் கடும் நடவடிக்கையே ஏழை மக்களின் நலன் கருதி எடுக்க வேண்டிய நிலையேற்பட்டது. நான் இதனால் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மார்க்கோஸ் போல் நடந்துகொள்ள முற்படுகிறேன் என்று எட்டியாந்தோட்டைப் பிரதிநிதி கலாநிதி என். எம். பெரேரா கூறியிருக்கிறார். ஏழை மக்களின் நலன் கருதி நான் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டிவந்தது என்பது தான் உண்மை. நாட்டின் நெருக்கடி நிலையை விலக்க இதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

சமீபத்திய வேலைநிறுத்தத்தின்போது ரயில்வேப் பகுதிக்கு மட்டுமல்ல இ. போ. ச.வுக்கும் பலத்த நஷ்டமேற்பட்டது. இ. போ. ச. வாகனங்களின் பெற்றோல் தாங்கிகளுக்குள் மரத்தூள் போடப்பட்டது. பஸ்களுக்குக் கைக்குண்டுகள் வீசப்பட்டது. இதில் காயமுற்ற இ. போ. ச. ஊழியர் இன்னமும் சிகிச்சை பெற்றுவருகிறார்.

நான் அப்படிக் கூறவில்லை

வெளிநாட்டுச் சக்திகள் வியட்நாமில் தோல்வி கண்டதால் இலங்கையில் நுழைய முற்படுகின்றனவோ என எண்ணவேண்டியுள்ளது. இது பற்றி நான் விவாதமொன்றில் நிகழ்த்திய உரை பற்றிய பத்திரிகைச் செய்திகள் நாட்டு மக்கள் மத்தியில் தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது. இவ்வெளிநாட்டுத் தலையீடு குறித்து எனது அமைச்சர்களிடம் கூட நான் கூறவில்லை என்று நான் அன்று சொல்லவில்லை. இத்தகவல்களைத் தந்தவர்களின் உதவியை இழந்துவிட நேரிடுமோ என்று நான் நினைக்கின்றபடியால்தான் இத்தகவல்களைத் தந்தவர்கள் பற்றிய விபரங்களை வெளியிட முடியாதிருக்கிறது என்று சொன்னேன்.

காணிச் சீர்திருத்தச்சட்டம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட பெரும் செல்வந்தர்கள் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காகத் தமது முழுச் செல்வத்தையும் செலவிடத் தயாராக இருப்பார்கள். அரசாங்கத்தின் இம்முற்போக்கு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட செல்வந்தர்கள் வாளாவிருப்பார்கள் என்று எண்ணிவிடத்தேவையில்லை.

துல்ஹிரிய, வியாங்கொடை முதலான இடங்களில் உள்ள நெசவாலைகளில் வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டதால் பிடவைகளை நாம் இறக்குமதி செய்ய வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

இந்நாட்டின் பெண்களுக்கு நான் வேண்டுகோள் ஒன்றினை விடுக்க விரும்புகிறேன். பெண்கள் தம் கணவன்மார் நியாயமற்ற வேலைநிறுத்தங்களில் ஈடுபட அனுமதிக்கக்கூடாது. இதனால் பிள்ளைகளும் நாட்டுமக்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதனை பெண்கள் உணர வேண்டும். நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பெண்களின் பங்கு முக்கியமானது.

நிதி, நீதியமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா உட்பட மற்றும் பலரும் பேசினர்.

முதலாம் பரிசுச்சீட்டை பிரதமர் இழுத்தார். (ஸ்ரீ)

பேராசிரியர் கனகசபாபதிக்கு இறுதி அஞ்சலி

யாழ்ப்பாணம், புதன்

மறைந்த பேராசிரியர் வே. கனகசபாபதியின் தகனக்கிரியைகள் நேற்றுக் காலை ஏழாலையில் இடம்பெற்றன.

இறுதி யாத்திரையில் பேராசிரியரின் மாணவர்கள், நண்பர்கள், சக ஆசிரியர்கள், உறவினர்கள் என்று ஏராளமானவர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

இலங்கைப் பல்கலைக்கழக வளாகத்தின் தமிழ் பேராசிரியர் க. கைலாசபதி, வளாக ஆசிரியர்கள் சங்கம் சார்பில் திரு. வி. கே. கணேசலிங்கம், வளாக ஊழியர்சங்கம் சார்பில் திரு. கே. பாஸ்கரன், வளாக மாணவர்சங்கம் சார்பில் விஞ்ஞானபீட மாணவர் சங்க செயலாளர் திரு எஸ். யோகநாதன், பேராதனை வளாக ஆசிரியர்கள் சார்பில் பேராசிரியர் சு. வித்தியானந்தன், மல்லாகம் இந்துக்கல்லூரி அதிபர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம், ஊற்று மாணவர்சங்க சார்பில் திரு. [illegible], பேராசிரியரின் நண்பர்கள் சார்பில் எஸ். ராஜநாயகம், பேராசிரியரின் முன்னாள் மாணவர்கள் சார்பில் திரு. க. கிருஷ்ணானந்தசிவம் ஆகியோர் மலர்வளையங்கள் வைத்து பேராசிரியருக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

வளாக ஆசிரியர் மாணவர்கள் தேவாரம் பாடினார்கள். இறுதியாத்திரை புறப்பட்டபோது மாணவர்கள் அணிவகுத்து நின்று மரியாதை செலுத்தினார்கள். யாழ். வளாக பிரதிபதிவாளர், ஊழியர்சங்கம், தமிழ்மன்றம் மற்றும் மன்றங்களின் பிரதிநிதிகளும் மலர்வளையங்கள்வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

சங்கானை நவீனமார்க்கட்:

ஒத்துழைப்பு வழங்குவதாக வர்த்தகர்கள் உறுதி!

சங்கானை, செவ்வாய்

சங்கானை மார்க்கட்டில் இருக்கும் சகல வர்த்தகர்களின் ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் ஏற்று நவீன சந்தையை உருவாக்க சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் இன்று ஆலோசனைக்கூட்டம் ஒன்றை நடத்தினார்.

பட்டினசபை காரியாலய மண்டபத்தில் நிகழ்ந்த கூட்டத்தில் ப. ச. தலைவர் தமது கருத்தில் இதற்கான அமைப்பை வர்த்தகர்களுக்கு விளக்கியதுடன் நவீன சந்தைக்கட்டிடம் பூர்த்தியானதும் அவரவர்களுக்கு உரிய இடங்கள் கொடுக்கப்படுவதுடன் வர்த்தகர்களை பாதிக்கக்கூடிய வகையில் எந்த ஓர் நடவடிக்கையும் ப. சபையால் மேற்கொள்ளப்படமாட்டாதெனவும் தெரிவித்தார்.

வர்த்தகர்கள் சார்பில் இத்திட்டத்தை ஆதரித்துப்பேசிய திரு. தம்பு ஐயாத்துரை, தலைவரது முன்னோடியான இத்திட்டங்களைத் தாம் பெரிதும் மதிப்பதாகவும் வேண்டிய நேரங்களில் தங்களாலான ஒத்துழைப்புகளை நல்குவதாகவும் பிரசன்னமாயிருந்த வர்த்தகர்கள் சார்பில் உறுதியளித்தார்.

நவீனசந்தை அமைப்பதற்கான முன்னோடியான திட்டங்களைச் சபை தயாரித்துவருகிறது. இதற்கான அளவை மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஏ)

……

புதிய பிரதியமைச்சர்

கொழும்பு, செவ்.

தெகியோவிட்ட எம். பி. திரு. தனபால வீரசேகர பாராளுமன்ற அலுவல்கள் விளையாட்டுத்துறைப் பிரதியமைச்சராக இன்று சத்தியப் பிரமாணம்செய்து பதவி ஏற்றுக்கொண்டார். (உ)

லோகசபை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியாத நம்பிக்கை கொண்டுள்ளதை வெளிநாடுகளுக்கும் உள்நாட்டில் தம்மை எதிர்த்தவர்களுக்கும் உணர்த்தியுள்ளார் என்றும் மேற்படி செயற்குழுவின் தீர்மானம் ஒன்றில் திருமதி காந்தியை கழகம் பாராட்டியுள்ளது.

வேறுகட்சிகளுடன் உடன்பாடு மேற்கொள்ளப்படுவது பற்றி அ.தி.மு.க.வின் பேரவை தீர்மானிக்கும் என்றும் செயற்குழு முடிவுசெய்தது. (உ)

மரண அறிவித்தல்

திரு: தம்பியப்பா செல்வரெத்தினம்

ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த இளைப்பாறிய கொழும்பு நீதிமன்றக் காரியதரிசி திரு. தம்பியப்பா செல்வரெத்தினம் காலமானார். அன்னார் பராசக்தியின் அன்புக்கணவரும் சத்தியபாலதேவி, சரோஜாதேவி, இரத்தினதேவி, இராசவன் (Bank of Ceylon Illuppaikadavai) ஆகியோரின் அன்புத் தகப்பனும், K. V. நவரத்தினம் (Magistrate, Jaffna), S. கணேசதாசன் (I. M. F., Washington) டாக்டர் J. சிதம்பரநாதன் (Agricultural Research Officer, New-Zealand) ஆகியோரின் மாமனாருமாவார். அன்னாரின் ஈமச்சடங்குகள் இன்று (26-1-77) புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் மாலை 4 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

5327

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanadu P. O Box 49. Jaffna. Telegrams Eelanadu. Telephone 389. Registered as a Newspape in Sri Lanka.